بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

## *அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.03.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

Summary of the Friday Sermon - 13 March 2015 (Tamil)

இப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய சில விஷயங்களைக் கூறுவேன். அவை நேரடியாகவோ அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து கேட்கப்பட்டவை. அவற்றுள் பல படிப்பினைகள் நம்முன் வருகின்றன. இவற்றிலிருந்து இன்றும் கூட நாம் வழியை செப்பனிட பல வழிகாட்டல்கள் கிடைக்கின்றன.

முதல் சம்பவம் தப்லீக் சம்பந்தமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இருந்த ஆர்வம். அன்னார் எவ்வாறு ஜமாத்தைப் பார்க்க விரும்பினார்கள் என்பது குறித்தாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தப்லீக்கிற்காக எந்த அளவிற்கு ஆர்வமும் வேதனையும் இருந்தது என்றால் அதன் தாக்கத்தை ஜமாஅத் அன்பர்கள் உடைய எண்ணங்களை குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்.

ஒருமுறை அன்னார் ஒரு ஆலோசனை தெரிவித்தார்கள். நமது ஜமாஅத்திற்கென்று ஒரு தனி உடை இருக்க வேண்டும். அவர் தன்னகத்தே ஓர் தப்லீக்காக இருப்பார். அதாவது இவர் அஹ்மதி என்று அதன் மூலம் அறியப்படலாம். ஒருவர் தனித்து அறியப்படுவது ஒன்றும் விஷயமல்ல. நிச்சயமாக அவர்களது எண்ணம் என்னவென்றால் இவ்வாறு கண்டு பிறரது கவனம் திரும்பும் அதேவேளையில் சுயம அவருக்கு ஓர் உணர்வு இருக்கும். நான் அஹ்மதி என்று அறியப்படுவேன். எனவே நான் செயல் ரீதியாகவும், கொள்கை அடிப்படையிலும் சரியாக இருக்க வேண்டியது என்று.

ஆகவே இன்றும் கூட நமக்கு இந்த உணர்வை உருவாக்குவது அவசியமாகும். ஆடை ஒன்றும் ஒரு பொருட்டல்ல. குறைந்த பட்சம் நமது நிலைமைகளை பார்த்து ஒவ்வொருவரும் இவர் அஹ்மதி என்றும் பிறரை விட்டும் வித்தியாசமானவர் என்று உணர வேண்டும். அதற்காகவே ஆடைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டது.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எவ்வாறு ஒரு முபல்லிக் அல்லது மார்க்க பணியாற்றுபவரின் வடிவம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அன்னார் கூறுகிறார்கள். ஒரு முபல்லிக்கின் வடிவம் நம்பிக்கைக் குரியவரின் வடிவமாக இருக்க வேண்டும். இது தப்லீகில் மிக அவசியமாகும்.

குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு போதனை செய்தவாறு கூறினார்கள். ஆகவே, நான் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு கவனமூட்டுகின்றேன். அவர்களின் வெளிப்படையான தோற்றம் இஸ்லாமிய அடையாளங்களுக்கு ஏற்ப இருக்க வேண்டும். அவர்களது தாடி, உரோமம் மற்றும் உடைகளில் எளிமையை கடைபிடிக்க வேண்டும். தூய்மையான சுத்தமான ஆடைகளை அணிவதில் இருந்து இஸ்லாம் தடுக்கவில்லை. மாறாக, அதுவே வெளிப்படையான தூய்மையை கடைபிடிக்குமாறு கட்டளையிடுகின்றது. அசுத்தத்தின் அருகில் கூட செல்லாதீர்கள் என்கிறது. ஆனால் ஆடைகளில் அதிகம் செயற்கைதனத்தை கையாளுவது தடுக்கப்பட்டது. அதுபோன்று சிலர் கொஞ்ச நேரத்திற்கு ஒரு முறை தனது கோட்டையும், காலரையும் அழுக்காகிவிடவில்லையே என்று பார்த்துக் கொண்டே இருப்பார்கள். இது பொருத்தமற்ற விஷயமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சமுகத்தில் சிலர் நல்ல நல்ல துணிமணிகளைக் கொண்டு வந்தார்கள். அன்னார் அதனை பயன்படுத்தவும் செய்தார்கள். ஆனால் எப்போதும் உடைகள் ஸ்திரி போடப்பட்டிருக்கின்றனவா என்று கவனிப்பவர்களாக இருந்ததில்லை. அதுபோன்று உடையில் ஒரு தூசு கூட பட்டுவிடக் கூடாது என்றும் கருதியதில்லை.

கூறுகிறார்கள்: துணிமணிகளை ஸ்திரி செய்வது தவறல்ல. அதற்காக அதிகம் ஆர்வம் காட்டுவது, நேரத்தில் பெரும் பகுதியை அதற்காக செலவழிப்பது விரும்பத்தக்கதாக இருக்க முடியாது. அன்னார் கூறுகிறார்கள்: சிலருக்கு உடைகளைப் பற்றி எந்த அளவிற்கு Complex இருக்கிறதென்றால், நான் பார்த்துள்ளேன். சிலர் விருந்துகளின் போது அவர்களின் வடிவமே வேறு விதமாக மாறிவிடுகிறது. எங்களிடம் இன்ன வகை கோட் இல்லை. இந்த வகை கோட் இல்லை என்கின்றனர். மனிதனிடம் என்ன வகை உடைகள் உள்ளனவோ அதனுடனேயே மிகவும் நம்பிக்கையுடன் மக்களை சந்திக்க செல்ல வேண்டும். அசல் விஷயம் நிர்வாணம் மறைத்தல். தூய்மை, சுத்தம், நிர்வாணத்தை மறைக்கும் ஆடை இருக்கிற போது ஒருவரை சந்திப்பதை தவிர்ப்பதற்கு என்னிடம் இன்ன வகை கோட் இல்லை. இன்ன வகை மேலாடை இல்லை என்பது தான் காரணமாக இருக்கும் என்றால் அது மார்க்கம் இல்லை. உலகம் ஆகும். வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு இதில் அறிவுரை உள்ளது. குறிப்பாக முபல்லிக்கள் மற்றும் ஜமாஅத் அன்பர்கள் அசல் நோக்கம் பின்னால் போய்விடுமளவுக்கு வெளிப்படையான வசதி வாய்ப்புகளுக்கு முன்னுரிமை தரக் கூடாது. அல்லது சிலர் இருக்கிறார்கள். சுத்தம் பற்றி எண்ணமே அவர்களிடம் இருப்பதில்லை. அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். தூய்மை ஈமானின் ஒரு பகுதியாகும். எனவே ஒவ்வொரு

விவகாரத்திலும் நடுநிலைமையை கையாள வேண்டும். இந்த பக்கமும் குனிந்து விடக்கூடாது. அந்தப் பக்கமும் குனிந்து விடக்கூடாது.

பிறகு தப்லீக் சம்பந்தமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஒரு சஹாபி தப்லீக்கின் வழிமுறைகளைப் பற்றி கூறுகிறார்கள். மியான் ஷேர் முஹம்மது சாஹிப் படிப்பறிவு இல்லாதவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பழைய சஹாபிகளுள் ஒருவராக இருந்தார். அவர் மார்க்கத்திற்காக தம்மை அர்ப்பணித்தவர்களுள் ஒருவராக இருந்தார். குதிரை வண்டி ஓட்டினார். அநேகமாக புளோர் என்ற இடத்திலிருந்து சவாரிகளை எடுத்துக் கொண்டு செல்வார். அவரது நடைமுறையாவது, சவாரி வருபவரை வண்டியில் அமர வைத்ததும் வண்டிச் செல்ல செல்ல சவாரியாக வந்தவர்களிடம் பேச்சை தொடங்கி விடுவார். அல் ஹகம் பத்திரிகை வாங்கி வந்தார். அதனை பாக்கெட்டில் இருந்து எடுத்து சவாரியாக வந்தவர்களிடம் உங்களில் படிக்கக் கூடியவர் எவரும் இருக்கிறீர்களா என்று கேட்பார். படிக்கக்கூடிய எவராவது இருந்தால் அவரிடம், இந்த பத்திரிகை என் பெயரில் வந்துள்ளது. கொஞ்சம் அதனை படித்துக் காட்டுங்கள் என்பார். வண்டியில் அமர்ந்து இருப்பவர் ஒரு வேலை கிடைத்ததும் மகிழ்ச்சியுடன் அதனை படித்துக் காட்டத் தொடங்கி விடுவார். அவர் படிக்க தொடங்கியதும், மியான் ஷேர் முஹம்மது சாஹிப், இது என்ன ? இதற்கு என்ன அர்த்தம் என்று விளக்கம் கேட்கத் தொடங்கி விடுவார். அவரது கேள்விக்கு அந்த அஹ்மதியல்லாத படித்துக் காட்டுபவர் யோசித்து பதில் சொல்ல வேண்டியது வரும். அதன் மூலம் அவ்விஷயம் அவரது உள்ளத்தில் பதியும்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள். அவர் இந்த சம்பவத்தை என்னிடம் கூறும் போது அதுவரை அவர் மூலமாக 12 க்கும் அதிகமானோர் பைஅத் செய்திருந்தனர். அதாவது அல் ஹகம் படித்ததன் மூலம். அதற்குப் பிறகு பல வருடங்கள் உயிரோடு இருந்தார். அவர் மூலம் அதற்குப் பிறகு எத்தனை பேர் இந்த வழிமுறை மூலம் பைஅத் செய்தார்கள் என்று தெரியவில்லை. சுருக்கமாக, நாம் பணியை தொடங்க பெரும் ஆலிமாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. மாறாக, படித்தவர்கள் கிடைக்காத பகுதிகளில் கூட படிக்காதவர் கிடைத்தாலும் படிக்காதவர்களையே நம்மிடம் இருந்து அனுப்பலாம். அவர்களுக்கு வாய் வழியாகவே மார்க்க விளக்கங்கள் தெரிவிக்கலாம். சின்ன ஜமாஅத்துகள், தூரத்தில் உள்ள ஜமாஅத்துகள் ஆகியவற்றிற்கு சிறப்பான வழிகாட்டல்கள் உள்ளன. அதன் மூலம் பணியை தொடங்கலாம். நாம் படித்த நபர் தான் வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தால் அத்தகைய ஒருவர் கிடைப்பதற்கு முன் எவ்வளவு காலம் ஆகும் என்று தெரியாது. இப்போதே ஜாமியாக்களில் இருந்து கனிசமான எண்ணிக்கையில் முரப்பிகள் வருகின்றனர். அவ்வாறிருந்தும் கூட வருங்காலத்தில் தேவையை நிறைவேற்ற முடியாது. ஏனெனில் ஆலிம்களுக்கு மார்க்கத்தின் நுட்பமான விபரம் கிடைக்கவும் கனிசமான நேரம் பிடிக்கிறது. மார்க்கத்தில் நுணுக்கங்கள் இருக்கிறது. மேலும் அதை கற்பதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது என்றாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள். அத்தீனு யுஸ்ரின் மார்க்கம் எளிதானதாகும். பெரும் பெரும் செமினார்கள், விவாதங்கள் மூலம் தான் அல்லாஹ்வின் பக்கம் அழைத்தாக வேண்டும் என்று அவசியம் இல்லை. நிலைமைகளுக்கு ஏற்ப வழிமுறைகளை உருவாக்க வேண்டும். இக்காலத்திலும் கூட பல அஹ்மதிகள் தப்லீக்கிற்காக புதிய புதிய முறைகளை உருவாக்குகின்றனர். பெரும் வெற்றியும் பெறுகின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப் இருவருக்குமே நண்பராக இருந்த ஒருவரது சம்பவத்தை விவரிக்கிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய காலத்தின் ருசிகரமான சம்பவம். அன்னாரின் ஒரு நண்பர் இருந்தார். அவர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கும் நண்பர். அவரது பெயர் நிஸாமுத்தீன். அவர் 7 முறை ஹஜ் செய்தவர். மிகவும் சிரித்த முகமும், இனிய சுபாவமும் கொண்டவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இருவருடனும் நட்பு இருந்ததால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவால் நியமிக்கப்பட்டதாக வாதித்ததும் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அன்னார் மீது குஃப்ர் பத்வா வழங்கிய போது அவருக்கு மனதில் மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. ஏனெனில் இவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நேர்மையின் மீது மிகவும் உறுதி இருந்தது. அவர் லூதியானாவில் இருந்தார். எதிரிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி ஏதாவது சொன்னால் அவர்களுடன் சண்டைக்கு போய் விடுவார். நீங்கள் முதலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிலையை காணுங்கள். அவர் மிகவும் நல்ல மனிதர். நான் அவரோடு இருந்து பார்த்திருக்கிறேன். அவருக்கு (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு) ஏதாவது ஒரு விஷயத்தை குர்ஆனில் இருந்து எடுத்து புரிய வைத்தால் உடனே ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பார்கள். தந்திரங்கள் செய்ய மாட்டார். திருக்குர்ஆனில் இருந்து அவரது வாதம் தவறு என்று புரிய வைத்து விட்டால் அவர் ஏற்றுக் கொள்வது உறுதி. பல முறை அவர் மக்களுடன் விவாதம் செய்து வந்தார். நான் காதியான் சென்று அவர் எவ்வாறு தனது வாதத்தில் இருந்து தவ்பா செய்யாமல் இருக்கிறார் என்று பார்க்கிறேன் என்று கூறினார். அவரிடம் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம்) நான் திருக்குர்ஆனைத் திறந்து வைத்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்தில் இருப்பது குறித்து ஒரு வசனத்தை எடுத்துக் கூறி விட்டால் உடனே ஒப்புக் கொண்டு விடுவார். நான் நன்றாக அறிவேன். அவர் திருக்குர்ஆனின் வார்த்தையைக் கேட்டு எதுவும் சொல்ல மாட்டார்.

இறுதியில் ஒரு நாள் அவருக்கு ஓர் எண்ணம் வந்தது. லூதியானாவில் இருந்து காதியான் வந்தார். வந்ததும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கூறினார். என்ன நீங்கள் இஸ்லாத்தை விட்டுவிட்டீர்களா ? திருக்குர்ஆனை மறுத்து விட்டீர்களா ?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். அது எவ்வாறு நடக்க முடியும் ? நான் திருக்குர்ஆனை நம்புகின்றேன். இஸ்லாமே என் மார்க்கம். அவர் கூறினார். அல்ஹம்துலில்லாஹ். இதனைத் தான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் குர்ஆனை விட முடியாது. பிறகு கூறினார். சரி. நான் திருக்குர்ஆனில் இருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்துக்கு போய் விட்டார்கள் என்று நூற்றுக்கணக்கான வசனங்களை எடுத்து வைத்து விட்டால் நம்புவீர்களா ? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். நூற்றுக்கணக்கான வசனங்களை ஏன் குறிப்பிட வேண்டும். நீங்கள் ஒரே ஒரு வசனதை எனக்கு காட்டிவிட்டாலும் நான் ஏற்றுக் கொள்வேன். அவர் கூறினார். அல்ஹம்துலில்லாஹ். நான் இந்த விவாதம் தான் அவர்களிடம் செய்து வந்துள்ளேன். மிர்ஸா சாஹிபை சம்மதிக்க வைப்பது சிரமமில்லை. இவர்கள் தான் கூச்சல் போடுகிறார்கள்.

பிறகு கூறினார். சரி. நூற்றுக்கணக்கில் இல்லையென்றாலும் ஒரேயொரு நூறு வசனங்களை மட்டுமே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருப்பதாக காட்டினாலும் ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா ? அன்னார் கூறினார்கள். நான் கூறிவிட்டேன். நீங்கள் அப்படி ஒரே ஓர் வசனத்தை காட்டினாலும் நான் உங்களை ஏற்பேன். திருக்குர்ஆனில் 100 வசனங்களை அமல் செய்வது எப்படி அவசியமோ அதுபோன்று அதன் ஒவ்வொரு சொல்லையும் நம்புவதும் அவசியம் தான். ஒரு நூறு வசனங்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்போது அவர் நூறு வசனம் இல்லாவிட்டாலும் ஐம்பது வசனம் காட்டினாலும் ஏற்றுக் கொள்வீர்கள் தானே ? உங்கள் வாக்குறுதி இருக்குமா ? விட்டுவிடுவீர்களா ? என்று கேட்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். நான் கூறிவிட்டேன். நீங்கள் ஒரேயொரு வசனத்தை எடுத்து வையுங்கள். நான் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதில் உறுதியை வெளிப்படுத்த வெளிப்படுத்த அவருக்கு ஒருவேளை இவ்வளவு வசனங்கள் இதற்கு ஆதாரமாக இல்லை போலும் என்ற சந்தேகம் அவருக்கு வந்தது. கடைசியில் கூறினார். நான் பத்து வசனங்களை எடுத்து வந்தாலும் நீங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வீர்கள் இல்லையா என்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிரித்து விட்டார்கள். கூறினார்கள். நான் முதலில் கூறியதிலேயே நிற்கிறேன். ஒரே ஓர் வசனத்தையே வையுங்கள் என்றார்கள். சரி, நான் கிளம்புகிறேன். நான் ஐந்து நாட்களுக்குள் திரும்புவேன். திருக்குர்ஆனிலிருந்து அத்தகைய வசனங்களை காட்டுவேன் என்றார். அந்நாட்களில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி லாஹூரில் இருந்தார். ஹஸ்ரத் கலீஃபா அவ்வல் அவர்களும் அங்கு இருந்தார்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியுடன் விவாதத்திற்கான நிபந்தனைகள் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் விவாதம் நடைபெற இருந்தது. அதற்கான நிபந்தனைகளை கலீஃபா அவ்வல் மற்றும் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இருவருக்கும் இடையே வரையப்பட்டு வந்தன. அதற்காக இருவருக்கும் நடுவில் கடிதங்கள் எழுதப்பட்டு வந்தது. விவாதப் பொருள் மஸீஹின் மரணம் என்பதாக இருந்தது. முஹம்மது ஹுஸைன் பட்டாலவி கூறினார். திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாக ஹதீஸ்கள் உள்ளன. எனவே ஹதீஸிலிருந்து ஒரு விஷயம் நிரூபிக்கப்பட்டுவிட்டால் அது திருக்குர்ஆனின் கருத்தே என்று புரியப்படும்.

எனவே ஹதீஸ்களின் அடிப்படையில் மஸீஹின் மரணம் குறித்து விவாதிக்க வேண்டும். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அதாவது கலீஃபா அவ்வல் அவர்கள் கூறினார்கள். திருக்குர்ஆன் ஹதீஸ்களை விட முன்னுரிமை பெற்றது. எனவே எந்த நிலையிலும் ஒருவர் தனது கருத்தை திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்க வேண்டும். இந்த விவாதம் பல நாட்கள் நடந்தது. விவாதத்தை சுருக்குவதற்காக – எப்படியாவது முஹம்மது ஹுஸைன் சாஹிபுடன் விவாதம் நடத்தி விட வேண்டும் என்பதற்காக கலீஃபா அவ்வல் அவர்கள் அவரது பல கோரிக்கைகளை ஒப்புக் கொண்டு வந்தார்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அதில் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாம் எந்த நிபந்தனையை ஏற்கச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று. இந்நிலையில் அங்கு மியான் நிஸாமுத்தீன் சாஹிப் வந்து சேர்ந்தார். கூறினார். இப்போது எல்லா விவாதங்களையும் நிறுத்துங்கள். நான் இப்போது ஹஸ்ரத் சாஹிபை சந்தித்து வந்துள்ளேன். அவர் முற்றிலும் தவ்பா செய்வதற்கு தயாராக உள்ளார். நான் உங்களுக்கும், ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களுக்கும் நண்பனாவேன். எனவே உங்களுக்கும் அவருக்கும் இடையிலுள்ள கருத்து வேறுபாட்டால் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிவிட்டேன். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் இயல்பில் ஒரு நேர்மை உண்டு என்பதையும் நான் அறிந்துள்ளேன். எனவே அவரிடம் சென்று வாக்குறுதி வாங்கி வந்துள்ளேன். திருக்குர்ஆனிலிருந்து ஒரு பத்து வசனங்களை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்திற்கு சென்றது குறித்து காட்டினீர்கள் என்றால் அவர் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் உயிருடன் இருத்தலை நம்பத் தயாராக உள்ளார். நீங்கள் எனக்கு அத்தகைய 10 வசனங்களை காட்டுங்கள். முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் இயல்பில் கடும் கோபம் இருந்தது. மிகவும் அவசரக்காரரும் கூட. கூறினார். மதி குறைந்தவரே, எனது எல்லா வேலைகளையும் கெடுத்து விட்டீர். நான் இரு மாதம் விவாதம் செய்து அவரை ஹதீஸின் பக்கம் கொண்டு வந்துள்ளேன். நீர் மீண்டும் குர்ஆனின் பக்கம் கொண்டு போய் விட்டீர்.

மியான் நிஸாமுத்தீன் கூறினார். உங்களுக்கு ஆதரவாக ஒரு பத்து வசனங்கள் கூட இல்லையா ? அவர் கூறினார். நீர் ஒரு முட்டாள். குர்ஆனுக்கு என்ன அர்த்தம் என்று உமக்கு என்ன தெரியும் ? மியான் நிஸாமுத்தீன் கூறினார்கள். குர்ஆன் எங்கிருக்கிறதோ அங்கு தான் நானும் இருப்பேன். இதனை கூறிவிட்டு அவர் காதியான் வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்தார். பிறகு அன்னார் கூறினார்கள். பாருங்கள். திருக்குர்ஆனின் மீது . ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தது. அவர்கள் எவ்வளவு உறுதியுடன் கூறினார்கள். திருக்குர்ஆன் தமக்கு எதிராக இருக்க முடியாது என்று.

அதன் பொருள் குர்ஆனுக்கும் . ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் குறிப்பான உறவு எதுவும் இருக்கும்

அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் குறிப்பான தொடர்பு இருக்கிறது என்று பொருளல்ல. திருக்குர்ஆன் உண்மையின் வழியை காட்டும். எந்த பிரிவு உண்மையில் உள்ளதோ அதற்கு ஆதரவாக இருக்கும். . ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தாம் உண்மையின் மீது இருப்பதாக உறுதி இருந்தது. எனவே திருக்குர்ஆனும் அவர்களுடன் இருந்தது. எனவே தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். எனது ஒரு வாதம் திருக்குர்ஆனுக்கு ஏற்ப இல்லையென்றால் அதனை நான் குப்பை தொட்டியில் போட்டு விடுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தமது வாதம் குறித்து ஏதும் சந்தேகம் இருந்தது என்று அதற்கு ஒருபோதும் பொருளல்ல. மாறாக, இதனைக் கூற காரணம் என்னவெனில், திருக்குர்ஆன் என்னை உண்மைப்படுத்தும் என்று அவர்களுக்கு உறுதி இருந்தது. இந்த நம்பிக்கை தான் அவர்களை இவ்வுலகில் வெற்றி கொள்ளச் செய்தது. எனவே ஒவ்வொரு அஹ்மதிக்கும் எப்போதும் இந்த நம்பிக்கை இருக்க வேண்டும். திருக்குர்ஆன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் தான் இருக்கிறது. திருக்குர்ஆனின் ஆதரவினால் தான் ஒவ்வொரு நாளும் தூய இயல்பு கொண்ட மக்களின் நெஞ்சங்களை வெளிச்சமாக்கியாவாறு ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகமாகிறது.

பிறகு எதிர்ப்பும்கூட நேர்வழிக்கு காரணமாக இருக்கிறது என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள். எதிர்ப்பு அதிகமாகும் போது ஜமாஅத்துக்கும் வளர்ச்சி கிடைக்கிறது. எதிர்ப்பு அதிகமாகும் போது அல்லாஹ் தஆலாவின் அற்புதகரமான ஆதரவுகளும், உதவிகளும் கூட அதிகமாகிறது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நண்பர் எவரேனும் எம் ஊரில் கடும் எதிர்ப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டால் அன்னார், இது உமது முன்னேற்றத்தின் அடையாளமாகும் என்று கூறுவார்கள். எதிர்ப்பு ஏற்படும் போது ஜமாஅத்தும் வளர்கிறது. எதிர்ப்பின் காரணத்தால் பல அறிமுகமில்லாத மக்களும் கூட ஜமாஅத்தைக் குறித்து தெரிந்து கொள்கிறார்கள். சிறிது சிறிதாக அவர்களது உள்ளத்தில் ஜமாஅத்தின் நூற்களைப் படிக்கும் ஆர்வம் ஏற்படுகிறது. அவர்கள் நூல்களை படித்ததும் உண்மை அவர்களின் உள்ளத்தை ஆட்கொண்டு விடுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சமூகத்தில் ஒரு முறை ஒரு மனிதர் வந்தார். பைஅத் செய்தார். பைஅத் செய்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரிடம் உங்களுக்கு தப்லீக் செய்தது யார் ? என்று கேட்டார்கள். அவர் நிதானமாக கூறினார். மவ்லவி ஸனாவுல்லாஹ் தப்லீக் செய்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வியப்புடன் எவ்வாறு என்று வினவினார்கள். அவர் கூறினார். நான் மவ்லவி சாஹிபுடைய பத்திரிகைகளையும் நூல்கைளையும் படிப்பேன். நான் எப்போதும் அதில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதைப் பார்த்து வந்தேன். ஒருமுறை எனக்கு எண்ணம் வந்தது. நானே சுயம் அந்த இயக்கத்தின் நூல்களை படிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று பார்க்க வேண்டும். நான் அந்த நூல்களை படிக்கத் தொடங்கியதும் எனது உள்ளம் திறந்தது. நான் பைஅத்திற்கு தயாராகி விட்டேன். எதிர்ப்பின் முதல் பயன் அதன் மூலம் இறை இயக்கங்களுக்கு வளர்ச்சி கிடைக்கிறது. பலருக்கு அதனால் நேர்வழிக்கு வழி ஏற்படுகிறது. இன்றும் கூட எதிரிகளின் எதிர்ப்பு மக்களின் உள்ளம் திறக்க காரணமாகிறது. பெரும்பாலான முபல்லிக்களின் அறிக்கைகளில் இது குறிப்பிடப்படுகிறது. பல கடிதங்களும் நேரடியாகவே வருகின்றன. எவ்வாறு அவர்கள் ஜமாஅத்தின் அறிமுகம் பெற்றார்கள் என்று.

அன்னார் கூறுகிறார்கள்: நபிக்கு அவரது ஊரில் அதிகம் கண்ணியமிராது என்பது விதியாகும். எனக்கு நினைவில் உண்டு. பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் இல்ஹாமாகிய யஃதீக்க மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக் – ஐ நிறைவேற்றும் பொருட்டு மிகுந்த பற்றுருதியால் நடந்தவாறே காதியான் வந்தார்கள். பொருளாதார நெருக்கடியால் அல்ல. பெரும் பெரும் முக்லிஸ்கள் பற்றுறுதி வாய்ந்தவர்கள் இருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர். ஆண்டு மாநாட்டு வேளையில் ஒரு ஜமாஅத் ஒரு பக்கமிருந்து வந்து கொண்டிருந்தது. இன்னொரு புறமிருந்து இன்னொரு குழு வந்து கொண்டிருந்தது. ஹாபிஸ் சாஹிப் கூறினார்கள். நான் பார்த்தேன். இரு குழுவும் ஓரிடத்தில் சந்தித்ததும் அழத் தொடங்கினர். ஏன் அழுகின்றீர்கள் என்று நான் கேட்டேன். கூறினார். இதில் ஒரு பகுதியினர் முன்னரே ஈமான் கொண்டவர்கள். வந்தவர்களுள் இரு பிரிவினருள் ஒரு பிரிவு முதலில் ஈமான் கொண்டவர்கள். ஈமான் கொண்ட காரணத்தாலேயே அந்த இன்னொரு குழு அவர்களுக்கு தொல்லை கொடுத்தது. எந்த அளவுக்கு எனில் கடைசியில் அவர்கள் ஊரை காலி செய்து விட்டனர். பிறகு அவர்கள் எங்கு சென்றார்கள் என்று எங்களுக்கு தெரியாமல் போய் விட்டது. சில காலங்களுக்குப் பிறகு அல்லாஹ் தஆலா அஹ்மதிய்யத்தின் ஒளியை எங்களிடமும் பரப்பினான். நாங்கள் அஹ்மதிகளை எங்கள் வீடுகளில் இருந்து எதிர்ப்பினால் வெளியேற்றியவர்கள். இப்போது நாங்களே அஹ்மதியாகி விட்டோம். ஆக, எதிர்ப்பவர்களாக இருந்தவர்கள் பிறகு அஹ்மதிகளாயினர். முதலில் பைஅத் செய்தவர்களை வெளியேற்றிய பிறகு.

பிறகு இங்கு வந்து சேரும் போது அல்லாஹ்வுடைய ஞானத்திலிருந்து நாங்கள் வெளியேற்றிய அந்த சகோதரர்கள் வேறு பக்கமிருந்து வந்தனர். நாங்கள் அவர்கள் வருவதை பார்த்ததும் வேதனையால் எம் உள்ளம் நிரம்பியது. இம்மக்கள் எம்மை நேர் வழியின்பால் ஈர்த்தனர். நாமோ அவர்களிடம் பகைமையும் விரோதமும் காட்டினோம். எந்த அளவுக்கு எனில் அவர்கள் வீட்டை விட்டு போகும் நிர்பந்தத்துக்கு அளாயினர். இன்று இறைவன் எங்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து விட்டான். அந்த உணர்ச்சியால் நாங்கள் அழுகிறோம் என்றனர். இது அஹ்மதிய்யத்தின் அருளாகும். அது பிரித்து சென்றவர்களை ஒன்று திரட்டிவிட்டது. ஷைத்தான் அவர்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்தினான். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யத் அவர்களை ஒன்று சேர்த்து விட்டது. இன்ஷா அல்லாஹ் இப்போதும் அந்த காட்சி தென்படும்.

மவ்லவிமார்கள் பொது மக்களிடம் தவறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். மஸீஹ் தமது கையால் பறவைகளைப் படைத்தார். பிறகு அதில் உயிரைப் போட்டார். அங்கிருந்து அவை பறவைகளைப் போன்று பறந்தன. இது திருக்குர்ஆனை சரியாக புரியாததன் காரணத்தால் ஆகும். அதன் பொருள் ஆன்மீக தகுதியுடைய மக்களுக்கு பயிற்சி தந்து அல்லாஹ்வின் பக்கம் ஆன்மீகமாக பறந்து செல்லும் தகுதிவுடையவராக மாற்றினார் என்பது மட்டுமேயாகும். எவ்வாறிருப்பினும் அவ்வாறு கோட்பாடு வைத்திருக்கும் ஒரு மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். எழுதுகிறார்கள். ஒரு முறை ஒரு மவ்லவியிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கேட்டார்கள். மஸீஹ் பறவையை படைத்தார் என்று கூறுகிறீர்கள். உலகில் நமக்கு தென்படுகிற பறவைகளுள் சில இறைவன் படைத்தவையாக இருக்கும். சில மஸீஹ் படைத்தவையாக இருக்கும். இரண்டிற்கும் இடையில் ஏதாவது வித்தியாசம் கூற முடியுமா ? இறைவன் படைத்த பறைவைகள் எவை ? மஸீஹ் படைத்தவை எவை என்று அறிந்து கொள்வதற்கு ? அந்த மவ்லவி பஞ்சாபியில் கூறினார். அது சிரமமாகும். இறைவன் படைத்த பறவைகளும், மஸீஹ் படைத்தவைகளும் கலந்து விட்டன. இப்போது இரண்டையும் பிரித்து பார்ப்பது சிரமம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி அன்னார் கிறித்தவர்களுக்கு எதிரில் கடும் வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகிறது. ஆனால் பார்க்கும் போது விஷயம் வேறாகும். அன்னார் முந்திக் கொண்டு முதலில் ஒருபோதும் எதுவும் சொன்னதில்லை. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள். சிலவேளை விஷயம் அளவுக்கு மீறும் போது அதே அளவுக்கு அதற்குப் பதிலும் தரவேண்டி வருகிறது. கிறித்தவர்கள் எப்போதும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து வந்தனர். முஸ்லிம்கள் அதற்கு பதில் தருவதில்லை என்பதால் கிறித்தவர்கள், இஸ்லாத்தின் நிறுவனரிடம் பலஹீனம் உள்ளது என்று கருதி விட்டனர். ஒரு மார்க்கத்தில் பலஹீனம் இல்லையென்றால் அது மஸீஹ் ஒருவரிடம் மட்டும் தான் என்று கருதினர். அவர்கள் முஸ்லிம்களின் நல்லியல்பை தவறாக பொருள் புரிந்து கொண்டனர். நாம் அசுத்தத்தை உமிழ்கிறோம். அவர்கள் திரும்பிச் செய்வதில்லை. அதிலிருந்து அவர்களது தலைவரிடம் அவை யதார்த்தத்திலும் காணப்படுகின்றன என்று தெரிகிறது என்று கருதினர்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். நாளுக்குப் பின் நாள் கழிந்தன. வாரங்களுக்குப் பின் வாரங்கள் கழிந்தன. வருடங்களுக்குப் பின் வருடங்களும், நூற்றாண்டுகளுக்குப் பிறகு நூற்றாண்டுகளும் கழிந்தன. 7,8 நூற்றாண்டுகள் தொடர்ந்து கிறித்தவர்கள் அசுத்தங்களை உமிழ்ந்து வந்தனர். முஸ்லிம்களின் மீதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும். முஸ்லிம்கள் மன்னித்து வந்தனர். இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அனுமதி தந்தான். இப்போதும் நீங்களும் உமது கைகளை காட்டுங்கள் என்று அவர்களிடம் எதுவும் குறைபாடு இருக்கிறதா இல்லையா என்று கூறுங்கள் என்றான்.

இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இயேசுவைப் பற்றி யூதர்கள் கூறிய விஷயங்களை அதுவும் கிறித்தவர்களின் நூல்களில் எழுதப்பட்ட விஷயங்களை எழுதினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 2,4 நூல்களை எழுதியதும் எல்லா கிறித்தவர்களும் உலகில் கூச்சலிட்டனர். இந்த முறை சரியில்லை என்று. உங்கள் வழிமுறை சரியில்லை என்று நாம் உங்களிடம் சொன்னோம். நீங்கள் புரியவில்லை. இறுதியில் உங்கள் மீது அடி பட்டதும் உங்களுக்கு உணர்வு வந்தது. இது சரியில்லை என்று கூறுகிறீர்கள். ஆகவே சிலவேளைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கடும் வார்த்தைகளைப் பயன்படுத்தியது பதிலடியாகத்தான். முதல் அடியாக அல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பஞ்சாபின் ஒரு பெரிய மருத்துவர் அவரை கலீஃபா அவ்வல் கூட மிகவும் மதித்தார்கள். அவரைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள். அம்மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நல்ல பிடிப்பு கொண்டவராக இருந்தார். ஆனால் அத்தகைய பிடிப்பு இருந்தும் அன்னாரின் வாதத்தை ஏற்கவில்லை. அவரது ஒரு ருசிகரமான சம்பவம். ஹகீம் சாஹிப் அவர்களின் எண்ணத்தின்டிப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வஃபாத்தே மஸீஹ் பிரகடனங்களுக்கெல்லாம் வேறு சில காரணங்கள் இருந்தன என்பதாகும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அதனை இவ்வாறு ஆரம்பித்தார்கள்.

கூறுகிறார்கள். இக்காலத்திலும் நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களையும் அன்னார் ஈஸா (அலை) அவர்கள் மரணத்தை உலகின் முன் வைத்த போது மக்கள் நவூதுபில்லாஹ் பைத்தியம் என்றார்கள். முஸ்லிம்களால் புரியவே முடியவில்லை. 1300 வருடமாக பெரியவர்கள், ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிரோடு இருக்கிறார் என்று கூறி வந்துள்ளனர். அவர் எவ்வாறு இறந்து போவார் ? மக்களிடம் இது குறித்து எந்த அளவுக்கு உறுதியான கொள்கை இருந்தது என்றால் ஹகீம் சாஹிப் உடைய ஒரு சம்பவம் கூறுகிறார்கள். அதிலிருந்து அதில் எவ்வளவு உறுதியான எண்ணம் மக்களுக்கு இருந்தது என்று தெரிய வரும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார் என்பது நடக்கவே முடியாத கூற்று என்று நம்பினர். கூறுகிறார்கள். பஞ்சாபின் ஒரு பிரபல மருத்துவர் அவரது மருத்துவ மேன்மையை ஹஸ்ரத் கலீஃபா அவ்வல் போன்ற மருத்துவர்களே ஒப்புக் கொண்டிருந்தனர். அவரது பெயர் ஹகீம் அலாவுத்தீன் ஆக இருந்தது. பேராவைச் சார்ந்தவர். அவரிடம் ஒரு முறை கலீஃபா அவ்வல் உடைய ஆழமான நண்பரும், பற்றுறுதிமிக்க அஹ்மதியாக இருந்த மவ்லவி ஃபஸ்ல் தீன் சாஹிப் பேரவி சென்றார். அவருக்கு தப்லீக் செய்தார். அவர் கூறியதை கேட்டு விட்டு கூறினார். ஹகீம் சாஹிப் மியான், நீர் என்ன எனக்கு தப்லீக் செய்கிறீர் ? நீர் என்ன தெரிந்துள்ளீர் ? எனக்கு என்ன புரிய வைக்கப் போகிறீர் ! மிர்ஸா சாஹிபின் மீது எனக்கு இருக்கிற கொள்கைப் பிடிப்பில் பத்தில் ஒரு பாகம் ஏன் இருபதில் ஒரு பாகம் கூட உனக்கு இருக்க முடியாது. மவ்லவி பஸ்லுத்தீன் சாஹிப் இதனைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இவர் உள்ளத்தால் அஹ்மதி என்று நினைத்து விட்டார். எனவே அவரிடம் சொன்னார். உங்களுடைய பேச்சைக் கேட்டு எனக்கு மிகவும் சந்தோஷம்.

உங்களுக்கு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடம் பிடிப்புள்ளது. இயக்கம் குறித்து இன்னும் கூறினார்கள் என்றால் நான் அதனைக் கேட்டு மகிழ்வேன் என்றார். கூறினார். இக்கால அறிவற்ற இளைஞர்கள் பேச்சைக் கேட்பதில்லை. அப்படியே தப்லீக் செய்ய விரைகிறார்கள். எனக்கு மஸீஹின் மரணத்தை பற்றி புரிய வைக்க நீர் வந்து விட்டீரா ? மிர்ஸா சாஹிப் இந்த விவகாரத்தை எடுத்து வைப்பதில் என்ன ஹிக்மத் உள்ளது என்று உமக்கு தெரியுமா ? அவர் கூறினார். தாங்களே கூறுங்கள். அவர் கூறினார். கேளுங்கள். அசல் விஷயம் என்னவென்றால் மிர்ஸா சாஹிப் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூல் எழுதினார். 1300 வருடத்தில் ஏதாவது ஒரு முஸ்லிமுடைய மகன் இது போன்ற நூல் எழுதியிருப்பானா ? மிர்ஸா சாஹிப் அதில் எத்தகைய ஞானங்களை நிறைத்துள்ளார்! எந்த முஸ்லிமின் புத்தகமும் அதன் முன் நிற்க முடியாது.

ஆக, அது இஸ்லாத்திற்காக ஒரு சுவர் ஆகும். அது மற்ற மார்க்கங்களிலிருந்து அதனை பாதுகாத்தது. ஆனால் மவ்லவிமார்கள் மிகவும் முட்டாள்களாகவும் அறிவீனர்களாகவும் இருந்தனர். அவருக்கு நன்றி செலுத்துவதற்குப் பதில், மரியாதையுடன் அவரிடம் இனி நீங்கள் கூறுகிற ஆதாரங்களை பயன்படுத்துவோம் என்று கூறுவதற்குப் பதில் திருப்பி அவர் மீது குஃப்ர் பத்வா தந்தனர். இஸ்லாத்திற்காக அவர் செய்த மகத்தான பணிகளை பார்த்த பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு 1300 வருடத்தில் எவரும் செய்யாத பணிகளைப் பார்த்த பிறகும் அவருக்கு எதிராக குஃப்ர் பத்வா தரத் தொடங்கினர். மவ்லவிமார்கள் தமது அறிவை காட்ட நினைத்தனர். நாங்கள் பெரியவர்கள் என்று கருதினர். அதனால் தான் மிர்ஸா சாஹிபுக்கு கோபம் வந்து விட்டது. மிர்ஸா சாஹிபுக்கு கோபம் வர வேண்டியது தான். வந்தது. இதெல்லாம் ஹகீம் சாஹிப் கூறி வருகிறார். இனி தனது ஆதாரம் எடுத்து வைக்கிறார் ஹகீம் சாஹிப். இந்த வகையில் மவ்லவிமார்களிடம் மிர்ஸா சாஹிப் கூறினார். அப்படியா ? உங்களது அறிவில் பெரும் கர்வம் வேறா ? மஸீஹ் உயிருடன் இருக்கிறார் என்று திருக்குர்ஆனில் எவ்வளவு நிரூபணம் ஆகிறதோ அதற்கு எதிரில் அவரது மரணத்தை நிரூபிப்பது சாத்தியமில்லாததாக தெரிகிறது. ஆனால் நான் குர்ஆனில் இருந்தே ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தை நிரூபித்துக் காட்டுகிறேன். உங்களுக்கு தைரியம் இருந்தால் மறுத்துக் காட்டுங்கள் பார்ப்போம்.

இந்த வகையில் மவ்லவிமார்களின் அறிவீனத்தை காட்டுவதற்காக மஸீஹின் மரண விவகாரத்தை எடுத்து வைத்துள்ளார். திருக்குர்ஆனில் இருந்து அதற்கு நிரூபணம் தரத் தொடங்கினார். தொடர்ந்து ஹகீம் சாஹிப் கூறுகிறார். மவ்லவிமார்கள் எல்லா கூச்சல்களையும் இடட்டும். முழு இந்தியாவின் மவ்லவிமாரும் சேர்ந்து மிர்ஸா சாஹிபின் ஆதாரங்களை எதிர் கொள்ள முடியாது. அவர்கள் தலையையே தூக்க முடியாதவாறு மிர்ஸா சாஹிப் அவர்களை பிரித்து விட்டார். இப்போது இதற்கு ஒரே சிகிச்சை தான் உள்ளது. வஃபாத்தே மஸீஹ் என்ற ஒரு விவாதமே இல்லை. மஸீஹ் உயிருடன் இருக்கிறார் என்ற கொள்கை தான் நிலையாக உள்ளது. ஆனால் இதற்கு ஒரே தீர்வு என்னவென்றால், இந்த சச்சரவை அகற்ற ஒரே வழியாவது எல்லா மவ்லவிமாரும் சேர்ந்து ஒரு குழுவாக வந்து ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடம் போக வேண்டும். அவரிடம் கூற வேண்டும். நான் உங்கள் மீது கண்ணியக் குறைவாக குஃப்ர் பத்வா எல்லாம் கொடுத்து விட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள் என்று கூற வேண்டும். பிறகு மிர்ஸா சாஹிப் குர்ஆனில் இருந்தே ஈஸா (அலை) அவர்கள் உயிரோடு இருக்கிறார் என்று நிரூபித்துக் காட்டுகிறாரா ? இல்லையா ? பாருங்கள்.

இவ்வாறு அவர் விளக்கம் தந்துள்ளார். பாருங்கள். நல்ல பிடிப்பு இருந்தும், மஸீஹ் உயிரோடு இருக்கிறார் என்ற கொள்கையில் எவ்வளவு உறுதியாக இருந்தார் ! பைஅத்தில் வர முடியவில்லை. ஆனால் நல்ல பிடிப்பு இருந்தது. நாம் உண்மையில் அன்னாரை ஏற்றுக் கொண்டது அல்லாஹ்வுடைய அருளாகும். நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மஸீஹின் மரணம் என்ற விவகாரம் கொள்கை விவகாரமல்ல. மாறாக, தவ்ஹீதினை நிலைநாட்டுவதற்கு மிகமிக அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வுடைய தவ்ஹீதை நிலைநாட்ட வேண்டியிருந்தது. இந்த வகையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மரணத்தை நிரூபித்து முழுமையான ஏகத்துவத்தின் பாதையில் இருந்த தடையை அகற்றினார்கள். இதன் காரணத்தால் தான் இந்த விவகாரத்துக்கு இவ்வளவு அழுத்தம் தந்தார்கள். இரவும் பகலும் இதனை குறிப்பிட்டு வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். எனக்கு நினைவு உண்டு. ஒருவர் கூறினார். ஹுஸூர், இந்த விவகாரத்தை தாங்கள் விட்டுவிடுங்கள். ஹுஸூர் அவர்களிடம் ஒரு கம்பீரம் இருந்தது. கூறினார்கள். எனக்கு இது சம்பந்தமாக சிலவேளை எவ்வளவு ஆவேசம் வருகிறது எனில் நான் பைத்தியமாகி விடக்கூடாதே என்று கருதுகிறேன். இந்த விவகாரம் இஸ்லாத்திற்கு கடும் நஷ்டம் விளைவித்துள்ளது. நாம் இதனை சின்னபின்னமாக்காமல் நிம்மதி மூச்சு விட முடியாது.

சிலர் இது என்ன பெரிய விவகாரம் என்று கூறுகிறார்கள். இது அஹதிய்யத் என்ற வழியில் (அதாவது ஏகத்துவம்) பெரும் தடையாகும். இதனை அகற்றுவதற்க ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பெரும் ஆவேசம் இருந்தது. அந்த ஆவேசம் தான் இறை அருளை ஈர்த்தது. உண்மைக்கு அடித்தளமிட்டது. நம்மில் இஸ்லாத்தின் மீது அன்புள்ள ஒவ்வொருவரும் புரிய முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உள்ளத்தில் இருந்த நெருப்பின் ஒரு கங்கு தான். எவரது உள்ளத்தில் இஸ்லாத்தைப் பரப்பும் துடிப்பும், இறைநேசத்தின் உணர்வும் இருக்குமோ அவரால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உள்ளத்தில் இருந்தது நெருப்பின் ஒரு கங்காகும் என்று உணர முடியும். எனவே நமது எல்லா முயற்சிகளும் இந்த மையப் புள்ளியை சுற்றி இருக்க வேண்டும். இதனை சார்ந்து இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இலக்குகளை முழுமை செய்தவாறு உண்மையான தவ்ஹீதை நிலைநாட்டுவதற்கு நமக்கு அல்லாஹ் நல்வாய்ப்பை தருவானாக!

From: Nazarat Nashr-o-Ishaath, Qadian